## இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

## இராஜபாளையம் - 626117

(மதுரை காமராஜர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

இருபாலர், மொழிவாரி சிறுபான்மைக் கல்லூரி

தேசியத்தர மதிப்பீட்டின் 'B++' தகுதிபெற்றது

# தமிழ்த்துறை

# நடத்தும்

# பன்னாட்டுக் கருத்தரங்கம்

**கருத்தரங்கத்தலைப்பு**

# 'கரிசல் வட்டார வழக்காறுகள்'

## நாள் : 15.4.2021

**கட்டுரையை பின்வரும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கலாம்.**

**Email:** tamilrrcjournal@gmail.com

**தொடர்புக்கு**

**9489457236**

### புரவலர்

**திரு. P.R. விஜயராகவன், செயலர்**

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

இராஜபாளையம் - 626117.

### தலைவர்

**முனைவர். இரா. ஜெகநாத், முதல்வர் (பொ)**

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

இராஜபாளையம் - 626117.

**திரு. நா. ரமேஷ், துணை முதல்வர்**

வேதியியல் துறைத்தலைவர்,

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

இராஜபாளையம்

### ஒருங்கிணைப்பாளர்

**முனைவர். வி. கலாவதி**

தமிழ்த்துறைத் தலைவர் & உதவிப்பேராசிரியர்

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

இராஜபாளையம்.

### கருத்தரங்க அமைப்புக்குழு

**திருமதி. சு. சத்யா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

**செல்வி வி. கார்த்திகா தேவி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

### தொழில்நுட்ப உதவி

**திரு. A. ஞான வேலாயுதம்,**

உதவிப்பேராசிரியர்,

வணிகக் கணிப்பொறியியல் துறை,

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,

இராஜபாளையம்.

**இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி**

**தமிழ்த்துறை,**

வணக்கம்...

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி, 48 ஆண்டுகளாக ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டுவருகின்றது. மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருதி குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்கும் உயரிய பணியைச் செய்துவருகின்றது. நல்ல வளர்ச்சி பெற்ற கல்வி நிறுவனமாக விருதுநகர் மாவட்டத்தில் இராஜபாளையம் சுற்றுப்புற மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டுவருகிறது. தமிழ்மொழியின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு பல்வேறு கருத்தரங்குகளையும், பயிலரங்குகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாகத் தற்பொழுது **'கரிசல்வட்டார வழக்காறுகள்'** என்னும் பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தத்திட்டமிட்டுள்ளது.

தமிழ் நிலவரைபடத்தில் மண்சார்ந்த அடையாளமாக, ஆய்வாளர்களாலும், வரலாற்று அறிஞர்களாலும், நிலவியலாளர்களாலும் வரையறுத்துச் சொல்லப்படுவது கரிசல் வட்டாரமாகும். வட்டார வரலாற்றில் கரிசல் வட்டாரத்திற்கு என்றுமே சிறப்பிடம் உண்டு. ஒரு வட்டாரத்தின் வரலாற்றை அதன் சமூகநிலைகளையும் வழக்காறுகளையும் கருத்தில் கொள்ளாமல் எழுதிவிடமுடியாது. அந்த வகையில் பிற வட்டாரங்களை விடவும் மரபு மாறாத பண்பாட்டு வளமையையும் இலக்கியச் செழுமையையும் தொடர்ந்து பேணிக்கொண்டிருப்பது கரிசல் வட்டாரத்தின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. பண்பாடும் கலை இலக்கிய ஆக்கங்களும் இம்மண்ணுக்கே உரிய தனித்துவங்களோடு

பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையன்று. தமிழ் இலக்கியச் சூழலில் வட்டார மொழிசார்ந்த யதார்த்தவாத எழுத்தின் மூத்த படைப்பாளர்களை உருவாக்கித்தந்த பெருமை இம்மண்ணிற்கு என்றுமே உண்டு. இன்றைய உலகமயமாதல் சூழலில் பொதுமொழி, பொதுப்பண்பாடு, பொதுவாழ்வு என்பதான முதலாளித்துவ பெருங்கதையாடல்கள் பிராந்திய உணர்வுகளையும் அதன் தனித்துவங்களையும் அழித்து அனைத்தையும் பொதுமைப்படுத்துகின்ற போக்கு காணப்படுகின்றது. இந்நிலையில் அந்தந்த நிலம் சார்ந்த வாழ்வியலையும், அதன் தனித்த பண்புகளையும் நாம் அவசியம் பதிவுசெய்யவேண்டும். மண்ணின் மரபுகளை அதனோடு தொடர்புடைய மனித உறவுகளை, அவ்வுறவில் தொழிற்படுகின்ற உயிர்ப்பும் உணர்வோட்டமும் உள்ள வழக்காறுகளை ஆவணப்படுத்தியும், ஆராய்ந்து எழுதியும் வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே **'கரிசல் வட்டார வழக்காறுகள்'** எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

1. சொலவடைகள்
2. பழமொழிகள்
3. கதைப்பாடல்கள்
4. பெண்வழக்காறுகள்
5. சிறார்வழக்காறுகள்
6. ஆண்வழக்காறுகள்
7. பாலியல் கதைகள்
8. பழக்கவழக்கங்கள்
9. பண்பாடு
10. மருத்துவம்
11. உணவு
12. தொழில்
13. கலைகள்
14. தொழில்நுட்பம்
15. சடங்குகள்
16. நம்பிக்கைகள்
17. வட்டாரமொழி
18. வரலாறு
19. புழங்குபொருட்கள்
20. பொருளாதாரம்
21. நிலவியல்
22. சமூகத்தடைகள்
23. சிறுதெய்வங்கள்
24. இனவியல்
25. இயற்கைஅறிவியல்
26. கல்வி
27. பொருளாதாரம்
28. அரசியல்
29. இலக்கியம்
30. தொன்மங்கள்

இது போன்ற பிற வழக்காற்றியல் கூறுகளையும் கரிசல் வட்டாரத்தை ஆய்வுக்களமாகக் கொண்டும் அதன் வழக்காறுகளை ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டும் ஆய்வு செய்ததரமான ஆய்வுக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.

**கட்டுரையாளர்கவனத்திற்கு...**

அனைத்துத் துறைசார்ந் தகல்லூரிப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வுக் கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில் 1.5 இடைவெளியுடன் ஏரியல்யுனிக்கோடு (Arial Unicode) எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து tamilrrcjournal@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **31.03.2021** தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். கட்டுரைகளுக்கு பக்கவரையறைகள் கிடையாது. ஆய்வு தன்னளவில்மு ழுமையானதாக அமைய வேண்டும்.

ஆய்வுக்கட்டுரைகள் சொந்த, முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல்கண்டடைவாக இருத்தல் அவசியம். தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் மற்றும் நூற்பட்டியல் முதலியன தமிழிலும் ஆங்கிலத்திலும் அமையவேண்டும். ஆய்வுக் கட்டுரைகளில் ஆய்வு முறைப்படி குறிப்பு மற்றும் நூற்பட்டியல் இடம்பெற்றிருக்கவேண்டும்.

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வையும், ஆய்வு முடிவுகளையும் கட்டாயம் வாசித்தளிக்க வேண்டும். கருத்தரங்கில் கலந்துகொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழில் வெளியிடுவதற்கு பரிந்தனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் **சர்வதேசத் தமிழ்ஆய்விதழின் (UGC – Care listed Journal),** வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியீட்டிற்கு பரிந்துரைக்கப்படும். அக்கட்டுரைகள் மட்டுமே இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1500 ஆய்விதழுக்கு செலுத்த வேண்டும்.

**கருத்தரங்கங்கில் பங்கேற்க பதிவுக் கட்டணம்**

**ஆய்வாலர்கள்: - ரூ.100,**

**பேராசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்: - ரூ.200**

**பதிவுக்கட்டணம், செலுத்த வேண்டிய வங்கி விபரம்**

**PRINCIPAL RAJAPALAYAM RAJUS' COLLEGE,**
**BANK OF BARODA, RAJAPALAYAM,**
**IFSC: BARB0RAJAPA (Fifth character is zero),**
**A/c. No. 17310100005019**

கருத்தரங்கில் பங்கேற்க விழையும் அனைவரும் பதிவுக்கட்டணத்தை மட்டும் செலுத்தி தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும். (தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகளுக்குரிய வெளியீட்டுக் கட்டணம் பிறகு பெறப்படும்). **ஆய்வு சிறக்க வாழ்த்துகள்.**

**நன்றி.**

******

**கட்டுரைமாதிரிவடிவம்**

https://drive.google.com/file/d/1T62DzdbcZzAsQC4_J7fET
qqsYcwkggs7/view?usp=sharing

**கட்டுரையை பின்வரும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கலாம்.**

**Email:** tamilrrcjournal@gmail.com

**தொடர்புக்கு**
**9489457236**